# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 20/2024 |
| Deposition of witness | : | PW-3 |
| Name | : | நல்லதம்பி |
| Father Name | : | அழகன் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 29 |

**Both accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19.03.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் கணக்கம்பாளையம் பிரிவில் வசித்து வருகிறேன். நான் தோட்டத்து பாளையம் பஸ் ஸ்டாப் அருகே அபிராமி பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் 6 ஆண்டுகளாக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 13.02.2024ம் தேதி மதியம் 2 மணி அளவில் நான் எங்கள் பைனான்ஸ் நிறுவனத்தின் கணக்கம்பாளையம் கிளையில் இருந்தபோது எங்கள் தோட்டத்து பாளையம் கிளையில் எனது அசிஸ்டன்ட் செல்வக்குமார் பொறுப்பில் இருந்தார். அப்போது நாகஜோதி என்பவர் அந்த கடைக்கு வந்து ஒரு கிராம் எடையுள்ள ஓம் டாலர் மற்றும் 100 கிராம் எடை கொண்ட கம்மல் ஆகியவற்றை ரூபாய் 7 ஆயிரத்திற்கு அடமானம் வைத்தார். அவர் அடமானம் வைப்பதற்கு அத்தாட்சியாக அவரது ஆதார் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளப்பட்டது.

2. 05.03.2024ம் தேதி ஊத்துக்குளி காவல் ஆய்வாளர் போலீஸ் பார்ட்டியுடன் ஆஜர் ஒன்றாம் எதிரி கார்த்தி மற்றும் நாகஜோதியையும் அழைத்துக்கொண்டு எங்கள் தோட்டத்துபாளையம் கிளைக்கு வந்தார்கள். அச்சமயம் நான் அந்த கடையில் தான் இருந்தேன். போலீசார் வெள்ளியம்பாளையத்தில் ரஞ்சித் குமார் என்பவர் வீட்டில் திருடிய நகைகளை நாகஜோதி எங்கள் கிளையில் அடகு வைத்ததாக சொன்னார்கள். நான் கடை பதிவுகளை பார்வையிட்டு கடந்த 13.2.2024ஆம் தேதியில் நாகஜோதி அடகு வைத்த நகைகளை போலீசில் ஒப்படைத்தேன். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன்.

3. மேலும் போலீசார் என்னை விசாரித்து நகைக்கடையின் கேமரா பதிவுகள் மற்றும் நாகஜோதி நகைகளை அடகு வைத்ததற்கான பதிவுகள் ஆகியவற்றை கைப்பற்றி சென்றார்கள். தற்போது காட்டப்படும் ஸ்ரீ அபிராமி பைனான்ஸ் 13.02.2024 தேதிய அடகு ரசீது எங்கள் கடையில் வழங்கப்பட்டதாகும். அதில் உள்ள கையொப்பம் எங்கள் கடையில் வேலை செய்யும் செல்வக்குமார் என்பவரது கையொப்பம் ஆகும். போலீசார் அந்த நகைகளை கைப்பற்ற வந்த சமயத்தில் செல்வகுமார் விடுப்பில் இருந்தார்.

4. தற்போது நீதிமன்றத்தில் ஒளிபரப்பப்படும் கேமரா பதிவுகள் எங்களது தோட்டத்து பாளையம் கிளையின் பதிவுகள் ஆகும். அதில் அந்த பெண்மணியிடம் நகைகளை வாங்குபவர் தான் செல்வக்குமார் ஆவார். மேற்படி கிளையின் மொத்த அளவு 10 க்கு 16 ஆகும். அதில் மேற்படி சிசிடிவி கேமரா உள் நுழைந்தவுடன் உள்ளே வரும் வாடிக்கையாளர் அமரும் இடத்தை பார்த்தவாறு இருக்கும்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் மூன்றாவது காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள மேற்படி சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.